# பாலர் பள்ளிகளிலும் சிங்கப்பூர் ஓகே சான்றிதழ்




படம்; ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்

சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்தி, சளிக்காய்ச்சல் கிருமிகள் நெருங்காமல் இருக்க தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடும் 6 வயது ஜோலீன் வோங்(இடது), லீ பூன் வீ .

சிங்கப்பூர் ஓகே சான்றிதழ் பெறும் முயற்சியில் பாலர் பள்ளி மாணவர்களும் இறங்கியுள்ளனர்.

சார்ஸ் நோய் பரவல் சமயத்தில் 2003ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஓகே இயக்கம் அறிமுகம் கண்டது. கடந்த மே மாதம் முதல் உணவுக்கடைகளில் இது மீண்டும் எழுச்சியுற்றது.

சிங்கப்பூர் ஓகே சான்றிதழைப் பெற விண்ணப்பித்த பள்ளிகளை, தேசிய சுற்றுப்புற வாரியம் மதிப்பீடு செய்யும். குழந்தைகளுக்குச் சுத்தமான சுகாதார முறைகளையும், கழிவறை உபயோகத்தையும் கற்றுக்கொடுத்தல். பள்ளியில் விளையாட்டுப் பொருள்கள், மெத்தைகள் உள்பட கிருமிகள் இல்லா சுற்றுப்புறத்தை உருவாக்கும் பள்ளிகள் இவையே தேசிய சுற்றுப்புற வாரியம் நிர்ணயிக்கும் மதிப்பீட்டு அளவுகள்.